# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1802/21 - 2013 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2013.03.22

*1802/21 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண சபை**

யட்டிநுவர பிரதேச சபை

**தகனசாலைகள் நடவடிக்கை பற்றிய துணைவிதிகள்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய மேற்குறித்த சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (xiv) உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, யட்டிநுவர பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள தகனசாலைகள் பற்றிய துணைவிதிகள், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது உப பிரிவின் 1 ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 பந்தியின் (1) ஆவது உப பிரிவின்படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண உள்ளூராட்சி அமைச்சரான சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் யட்டிநுவர பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் செயலுக்கு வரும் என்பததையும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி அமைச்சரும்,*
*மத்திய மாகாணம்.*

*மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,*
*கண்டி,*
*2013, பெப்புருவரி 11.*

**யட்டிநுவர பிரதேச சபை**

தகனசாலைகள் நடவடிக்கை பற்றிய துணைவிதிகள்

*1.* இந்த துணை விதிகள் யட்டிநுவர பிரதேச சபையின் தகனசாலைகளது நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும், முறைப்படுத்தும் துணை விதிகள் என அழைக்கப்படும்.

*2.* இந்தத் துணைவிதிகள் யட்டிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான தகனசாலைகளைப் பயன்படுத்துவதன் பேரில் கட்டணங்களை விதிப்பதற்கும் மற்றும் அறவிடுவதற்கும் என விதிக்கப்படுகின்றன.

*3.* தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலர் மூலமாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி பிரதேச சபைக்குச் சொந்தமான தகனசாலையொன்றில் எந்தவொரு இறந்த உடலையோ, உடற் பாகங்களையோ அல்லது மனித முளையத்தையோ தகனம் செய்தல் கூடாது.

*4.* 3 ஆவது துணை விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற விண்ணப்பிக்கும் ஒருவர் இதன் பின்னர் விண்ணப்பதாரி என அழைக்கப்படுபவர் அட்டவணை ''1'' இல் தரப்பட்டுள்ளதற்கிணங்கத் தயரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் ஆவணங்களுடன் தலைவரிடம் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் இடையிலுள்ள உறவை உறுதிப்படுத்தும் ஆவணத்தை முன்வைத்தல் வேண்டும். (இதற்கென இறந்தவரது வதிவிட கிராம அலுவலர் அல்லது சபையின் கௌரவ உறுப்பினர் ஒருவர்

வழங்கிய சான்றிதழ் அல்லது விண்ணப்பிப்பவரது பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் அல்லது அவை போன்ற சான்றிதழ் போதுமானது.) ;

(ii) விண்ணப்பிப்பவரது தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி அல்லது அவரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதும் ஆவணங்கள் ;

(iii) 1975 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க விவாக, பிறப்பு இறப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்திய பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் 110 ஆம் அத்தியாயத்தின் 11 ஆவது பிரிவின் கீழ் பிறப்பு, இறப்புப் பதிவாளர் ஒருவரால் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழில் யட்டிநுவர பிரதேச சபையின் தகனசாலையில் தகனம் செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) இறந்தவரது இறப்பு தொடர்பாகக் குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரணையொன்று நடத்தப்பட்டதெனின், அதனை நடத்திய நீதிபதி அல்லது மரண விசாரணை அதிகாரி பிறப்பு, இறப்பு பதிதல் சட்டத்தின் 41 (இ) பிரிவின் கீழ் இறந்த உடலைத் தகனம் செய்ய முடியும் என்று குறிப்பிட்டு வழங்கிய சான்றிதழ் ;

(v) இறந்தே பிறந்த உடலெனின், பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் சட்டத்தின் 41 (1) ஆவது பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழ்.

5. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை தலைவரிடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் கையளித்த பின், அவை கிடைக்கபெற்ற ஒழுங்கின்படி பதிவு செய்து கோவைப்படுத்தப்படும். அதற்கமையத் தகனம் செய்யப்படும் நேரத்தைக் குறித்து இறுதிப் பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

6. ஒரு இறந்த உடலைத் தகனம் செய்வதற்காகப் பிரதேச சபைக்குள் 7,000 ரூபா கட்டணமும், பிரதேச சபைக்கு வெளியில் 7,500 ரூபா கட்டணமும் பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும். இந்தக் கட்டணம் பிரதேச சபையின் தீர்மானத்துடன் காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்பட முடியும். குறித்த கட்டணம் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். குறித்த கட்டணங்கள் பிரதேச சபையின் அலுவலகத்திலும் தகனசாலையிலும் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. இறந்த உடலைத் தகனம் செய்யப் பொறுப்பேற்க முடியாதெனின், அதற்கான காரணத்தை விண்ணப்பிப்பவருக்கு எழுத்துமூலம் உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்.

8. தகனம் செய்வதற்காக இறந்த உடல்கள் ஒவ்வொரு நாளிலும் முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரை பொறுப்பேற்கப்பட முடியும். அதற்கு அப்பால் தகனத்துக்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.

9. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் இறந்த உடலைத் தகனசாலையின் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். குறித்த நேரத்தில் இறந்த உடலைக் கையளிக்க முடியாமற்போன காரணங்களினால் விண்ணப்பிப்பவருக்கோ அல்லது இறந்தவரது உரிமையுள்ள எவருக்கோ ஏற்படும் நட்டங்களையும், வசதியீனங்களையும் பிரதேச சபை பொறுப்பேற்க மாட்டாது.

10. ஒவ்வொரு தகனசாலையிலும் தகனம் செய்யப்பட்ட ஒவ்வொரு உடல் தொடர்பாக விண்ணப்பிப்பவரது பெயர், முகவரி, இறந்தவரது பெயர், இறப்பதற்கு முன்னர் அவர் வசித்த முகவரி, விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் இடையிலுள்ள உறவு, தகனம் செய்யப்பட்ட திகதியும் நேரமும் போன்ற விபரங்கள் அடங்கிய பதிவேட்டைத் தகனசாலைப் பொறுப்பாளர் பேணி வருதல் வேண்டும்.

11. இறந்த ஏதேனும் உடலொன்று தகனசாலையில் தகனம் செய்யப்படும்போது இயந்திரக் கோளாறு ஏற்பட்டுத் தகனம் செய்ய முடியாது போயின், தலைவரது ஆலோசனையின் பேரில் குறித்த உடல் பற்றிய மாற்றொழுங்குகளை மேற்கொள்ள வீண்ணப்பதாரி இணங்குதல் வேண்டும்.

12. இறந்த உடல் தகனம் செய்யப்பட்டு 21 நாட்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பிப்பவர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி அதன் அஸ்தியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எந்த விண்ணப்பதாரியேனும் அல்லது அவரது பிரதிநிதியேனும் பொறுப்பேற்காத அஸ்தி பொது மயானத்தில் அடக்கம் செய்யப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது அது தொடர்பாகச் சபைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள உரிமை கிடையாது.

*13.* தகனசாலையின் பொறுப்பாளர் அல்லது தலைவரது அனுமதியின்றித் தகனசாலையின் வளவுக்குள் நுழைவது குற்றமாகும். எனினும், இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான அனுமதியை வைத்திருப்பவருடன் வருபவருக்கு அல்லது வருவோருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும்.

*14.* தகனசாலை வளவுக்குள் அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்வதோ அல்லது தகனசாலையின் வளவில் அமைந்துள்ள சபையின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதோ அல்லது தகனசாலையின் பொறுப்பாளரது அல்லது அவரது உதவியாளரது கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பதோ கூடாது. அவ்வாறு நட்டமோ அல்லது சேதமோ ஏற்படின் குறித்த தகனத்துக்கான விண்ணப்பதாரி அவற்றுக்காக வகை கூறுதல் வேண்டும். அவ்வாறான நட்டத்தைக் கணிப்பிட்டு அதனை உரியவரிடம் தெரிவித்த பின்னர் அத்தொகையை அவர் செலுத்துதல் வேண்டும். அத்தொகையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அவர் சட்டரீதியான நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டுக் குறித்த தொகையுடன் அபராதத்தையும் அறவிட்டுக் கொள்வது சட்டபூர்வமானதாக அமையும்.

*15.* பிரதேச சபையின் அனுமதியின்றித் தகனசாலையின் வளவை அலங்காரம் செய்தல் கூடாது.

*16.* தகனசாலை பராமரிப்புக்காகவும், திருத்த வேலைகளுக்காகவும் எப்போதேனும் மூடிவைக்க வேண்டி ஏற்படின், அதுபற்றிய அறிவித்தலைத் தகனசாலையில் பகிரங்கமாகத் தெரியும் வண்ணம் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

*17.* இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

*18.* சொற்பிரயோகங்களுக்கான அர்த்தம் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணைவிதிகளில் –

(i) ''சபை'' என்பது, யட்டிநுவர பிரதேச சபையையும் ;

(ii) ''தலைவர்'' என்பது அத்தருணத்தில் நிலவும் எழுத்துருவிலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய யட்டிநுவர பிரதேச சபைக்கு நியமிக்கப்படும் தலைவரையும் ;

(iii). ''இறந்த உடல்'' என்பது மனிதனது உயிர் பிரிந்த உடல் அல்லது இறந்த உடலின் ஒரு பகுதி அல்லது உயிரற்ற நிலையில் பிறந்த ஒரு உடலையும் ;

(iv) ''தகனசாலைப் பொறுப்பாளர்'' என்பது பிரதேச சபையின் தகனசாலை ஒன்றினதும் அதன் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பவரையும் குறிப்பிடும் .

இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

**யட்டிநுவர பிரதேச சபை**

தகனசாலையில் இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பிப்பவரது முழுப் பெயர் :----.
   முகவரி :----.
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
   கிராம அலுவலர் பிரிவு :----.
2. இறந்தவரது பெயர் :----.
   வசித்த இடத்தின் முகவரி :----.
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
   கிராம அலுவலர் பிரிவு :----.
   பிரதேச சபைப் பிரிவு :---.
3. விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் உள்ள உறவு :----.
4. இறப்புச் சான்றிதழின் இலக்கமும் திகதியும் :----.
5. பதிவாளரது பெயர், கையொப்பம், முகவரி :----.

6. இறப்புக்கான காரணம் :----.
7. மரண விசாரணை நடத்தப்பட்டதாயின் திகதியும் நேரமும் :----.
8. விசாரணை அலுவலரது பெயரும் பதவியும் :-----.
9. மரண விசாரணையின் தீர்மானம் :----.
10. இறந்த உடலைத் தகனம் செயவதற்கு அனுமதி கிடைத்ததா/கிடைக்கவில்லையா?
11. தகனம் செய்வதற்கான உத்தேச திகதியும் நேரமும் :---.
12. விண்ணப்பிப்பவரின் தொலைபேசி இலக்கம் :----.

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். உரிய சான்றிதழ்களது பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

..........................................................................
பொறுப்பாளரின்/விண்ணப்பதாரியின்
கையொப்பம்.

திகதி :----.

**(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)**

1. அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்/அங்கீகரிக்கவில்லை.

| | |
|---|---|
| ........................................................................ | ........................................................................ |
| செயலாளர். | தலைவர்/அதிகாரம் பெற்ற அலுவலர். |

திகதி :----.

2. .................................... ஆம் திகதியைக் கொண்ட ................................. இலக்கப் பற்றுச்சீட்டின்படி ரூபா ........................ இற்கான தொகை அறவிடப்பட்டுள்ளது.

3. வேண்டுகோளை நிறைவேற்ற பரிந்துரை செய்கிறேன்/செய்யவில்லை.

4. பரிந்துரை செய்யவில்லையாயின் அதற்கான காரணம் :---.

........................................................................
விடயப் பொறுப்பு அலுவலர்.

திகதி :----.

4- 249

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.